## கோவை வரைவாளர் இல்ல வரலாறு




கோயம்புத்தூரில் இரயில்வே குடியிருப்பு வளாகத்தில் புதிதாக வரைவாளர் இல்லம் அமைக்க இடம் 2002–ல் ஒதுக்கீடு பெறப்பட்டது. அதனை தொடர்ந்து பல்வேறு வழிகளில் கட்டடம் கட்ட முயற்சிக்கப்பட்டது. இரண்டு முறை கால்கோன் விழாவும் நடத்தப்பட்டது. ஆனாலும் ஏனோ கட்டடம் அமைக்க இயலவில்லை.

நான் அமைப்பு செயலாளராக பணியேற்ற நாளில் நமது சங்கம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த பட்டியலிடப்பட்டது. அதில் கோவையில் வரைவாளர் இல்லம் அமைப்பது என்பதும் ஒன்றாகும். அன்றைய மாநிலத் தலைவர்,திரு.எஸ்.பவுன்ராஜன், மாநில பொதுச் செயலாளர், திரு.ஆர்.பெருமாள்பிள்ளை ஆகிய இருவரின் பேராதரவு மற்றும் எங்கள் மூவரின் ஒத்துழைப்பினால் 26.01.2019 அன்று மூன்றாவது முறையாக அடிக்கல் விழா நடத்தப்பட்டது. அன்றைய நிலையில் மத்திய சங்க நிர்வாகிகள் அனைவரும் வருகை புரிந்துள்ளனர். மாநிலத் தலைவர் நமது கிளைச் சங்க நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். குறிப்பாக கோவை, நீலகிரி மற்றும் திருப்பூர் கிளையின் மூத்த உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்திருந்தோம். பெரும்பாலனவர்கள் வருகை தந்து வாழ்த்தினார்கள்.

திரு.கே.சிவப்பிரகாசம், திரு.முருகன், திரு.சிவசுப்பிரமணியம்,

திரு.வி.ஜி.பாலசுப்பிரமணியம், திருமதி.மல்லிகா பாலசுப்பிரமணியம், திரு.அன்பழகன், திரு.சிவசங்கரன் மற்றும் பலர் வருகை தந்து வாழ்த்தியும் தமது பங்களிப்பினையும் வழங்கி ஊக்கப்படுத்தினார்கள்.

பின்னர் மத்திய சங்க பேராதரவினாலும், பிற கிளைச் சங்கத்தின் நிதி உதவியின் மூலமும் கோவை, நீலகிரி மற்றும் திருப்பூர் கிளைச் சங்கத்தில் சிலரின் பங்களிப்புடன் பணிகள் நிறைவடைந்தது. கடந்த 20.02.2021 அன்று தமிழ்நாடு கோவை வரைவாளர் இல்ல கட்டடத்தினை மாநிலத் தலைவர். திரு.எஸ்.பவுன்ராஜன் அவர்களால் திரு.ஆர்.பெருமாள்பிள்ளை அவர்கள் தலைமையில் எனது முன்னிலையிலும் திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி கட்டட திறப்பு விழாவிற்கு அன்றைய கோவை மண்டல நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர், பொறி.விஸ்வநாத், கோவை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்ட அலுவலக கண்காணிப்புப் பொறியாளர், பொறி.எஸ்.காசிலிங்கம் அவர்களும், ஏனைய சங்கத்தின் பொறுப்பாளர்களுடன் கோவையை சார்ந்த மூத்த வரைவாளர்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பு செய்தனர்.

கட்டடம் அமையப் பெற்ற பகுதி குளத்தின் கரைக்கு அருகில் இருந்ததால் Pile Foundation மூலம் மேற்கொண்டு அனைத்து மூலைகளிலும் pile Connect செய்து பின்னர், Grade Beam அமைத்து தரைக்கு மேல் முழுவதும் இரும்பு கம்பிகள் மூலம் பரப்பு செய்து தரை RCC கான்கிரிட் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. நான்கு தனி அறைக்குள் கழிப்பறை வசதியுடன் கூடிய, ஒரு கூட்ட அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. நல்ல காற்றோட்ட வசதியுடன், வெளிச்சம் முழுவதும் நிலைக்கும் வகையிலும் எழில் மிகு தோற்றத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டுமானத்திற்கு மத்திய சங்க நிதி உடன், கிளைச் சங்க நிதியும் சில அன்பு உள்ளம் கொண்டோரின் பங்களிப்புடனும் எஞ்சிய தொகை என்னால் வழங்கப்பட்டு அமைக்கப்பட்டது.

மேற்படி கட்டடம் அமைய என்னுடன் ஒத்துழைத்த கிளைச் சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரு. எஸ். அருண்குமார், திரு.B.ராஜேஷ். திரு.எம்.சந்திரன் மற்றும் திரு.ஆர்.சித்தார்த் அவர்களுக்கும் எனது நன்றியினையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறேன். இதற்கான நிதி வழங்கிய அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியினை தெரிவிக்கிறேன்.

**நன்றி,**

**அன்புடன்,**
**சு.க.கலைசெல்வன்,**
**மாநில பொதுச்செயலாளர்.**